# சுற்றறிக்கை

முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்
ஓ.மு.எண். 1276 /ஆ5/2026,

நாள். 27.03.2026

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் –பள்ளி மாணவர்கள் பாதுகாப்பு – நீர்நிலைகள் அருகில் செல்லாமல் இருக்க மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் – தொடர்பாக.

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி கீழ்காணும் அறிவுரைகளை பெற்றோர்களுக்கு வழங்குமாறு தெரிவிக்கலாகிறது.

1. பள்ளி மாணவர்கள் பள்ளி நேரம் முடிந்த பின்னர் மற்றும் விடுமுறை நாட்களில் கடல், ஆறு, ஏரி, குளம், கிணறு மற்றும் குட்டை போன்ற நீர் நிலைகளுக்கு அருகில் செல்லாமல் பார்த்துக்கொள்ள பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்..
2. கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் தேவையின்றி வெளியே செல்ல அனுமதிக்க வேண்டாம்
3. சூரிய ஒளி தாக்காமல் இருக்க மாணவர்கள் தொப்பிகளைப் பயன்படுத்தவும், அதிக தண்ணீர் அருந்த அறுவுறுத்துவதுடன் உச்ச சூரிய வெப்ப நேரத்தில் வெளியே செல்வதையும், வெய்யிலில் விளையாடுவதை தவிர்கருமாறு அறிவுறுத்த வேண்டும்.
4. ஆபத்தான பொருட்களைப் மாணவர்களின் பார்வையில் படாதவாறு பாதுகாப்பாக வைக்கவும். மேலும் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறா வண்ணம் மாணவர்கள் பாதுகாப்பாக இருக்க உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி), வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)